# AUXILIUM COLLEGE OF ARTS AND SCIENCE FOR WOMEN

**Affiliated to Bharathidasan University, Tiruchirappalli -24**

**Managed by Salesian Sisters, Trichy**

**Regunathapuram (Po) Karambakudi (Tk) Pudukkottai (Dt) – 622302**

2019-2020 ஆண்டிற்கான நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் அறிக்கை

நாள் 21.01.2020 முதல் 28.01.2020 இடம்: கல்லாக்கோட்டை, கறம்பக்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்

**முதல் நாள்**: 22.01.2020 புதன் கிழமை அன்று துவக்க விழாவானது கல்லாக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர், துணைத்தலைவர் கவுன்சிலர் மற்றும் எம் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி செல்வராணி அவர்கள், மற்றும் கல்லாக்கோட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் உயர்திரு சு. அடைக்கப்பன் ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு முகாம் துவக்க விழாவானது இனிதே துவக்கப்பட்டது. பின்னர் ஊராட்சி மன்ற கட்டிட வளாகம் தூய்மைபடுத்தும் பணி மேற்கொளள்ளப்பட்டது. மாலை 3.00 மணி அளவில் உயர்திரு முனைவர்.து.தாமஸ் ஜோசப்பிரகா' இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர்.நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் அவர்கள் நாடாளும் நாட்டு நலப்பணித்திட்டம் எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றினார்.








**இரண்டாம் நாள்**: 23.01.2020 வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் களப்பணியானது கவுன்சிலர் உயர்திரு இராஜேந்திரன் கல்லாக்கோட்டை அவர்கள் முன்னிலையில் அரசினர் உயர்நிலைப்பள்ளி வளாகம் தூய்மைப்படுத்தப்பட்டது. காலை 11.00 மணியளவில் தஞ்சாவூர் வாசன் கண் மருத்துவமனை மருத்துவர் உயர்திரு ராஜ்குமார் மற்றும் குழுவினர் அவர்கள் தலைமையில் இலவச கண்

பரிசோதனை மருத்துவ முகாமானது நடைபெற்றது. இம் முகாமில் அக்கிராமத்தில் உள்ள 158 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





**மூன்றாம் நாள்:** 24.01.2020 வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் சாலை செப்பனிடும் பணியானது அருட் சகோதரி ப்'பா கணிதவியல் துறை பேராசிரியை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மாலை 3.00 மணி அளவில் தொழு நோய் விழிப்புணர்வு முகாமானது புதுக்கோட்டைமாவட்ட தொழுநோய் சுகாதார ஆய்வாளர் உயர்திரு. ளு.முத்துகுமாரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





நான்காம் நாள்: 25.01.2020 சனிக்கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் களப்பணியானது கல்லாக்கோட்டை அங்கன் வாடி, அங்காடி ஆகிய இடங்களில் நடைபெற்றது. காலை 11.00 மணியளவில் மரக்கன்று வழங்கும் விழாவானது உயர்திரு. சேவியர் கந்தர்வக் கோட்டை ரோட்டரி சங்கத் தலைவர், முன்னாள் ரோட்டரி சங்கத் தலைவர், மற்றும் துணைத்தலைவர் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. மேலும் ரோட்டரி சங்கத் தலைவர் **மரம் நடுவோம் மழை பெறுவோம்** என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றினார் பின்னர் அக்கிராம மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. மாலை 3.00 மணி அளவில் எய்ட்ஸ்

நோய் விழிப்புணர்வு முகாமானது மழையூர் ஆரம்ப சுகாதார நிலைய எச்.ஐ.வி. ஆலோசகர் திருமதி. புஷ்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.










ஐந்தாம் நாள்: 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் குடியரசு தின சிறப்பு நிகழ்ச்சியானது கல்லாக்கோட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00 மணியளவில் தேசியக்கொடியினை ஊராட்சி மன்றத் தலைவர் உயர்திரு பவுன்ராஜ் அவர்கள் ஏற்றினார். பின்னர் எம் மாணவிகளால் கலை நிகழச்சிகள் வழங்கப்பட்டது. மேலும் எம் நாட்டு நலப்பணித்திட்ட மாணவி ரெய்சி சுபினா இன்றைய மாணவர்களுக்கு இன்னும் தேவை வீட்டுப்பற்றா? நாட்டுப்பற்றா? என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றினார். நிறைவாக நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.










**ஆறாம் நாள்:** 27.01.2020 திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் களப்பணியானது கல்லாக்கோட்டை பேருந்து நிறுத்தம், மற்றும் கடை **வீதிகளில்** நடைபெற்றது. காலை 11.00 மணியளவில் யோகா மற்றும் தொடு சிகிச்சை மருத்துவ முகாமானது கல்லாக்கோட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் மருத்துவர் ஏ.மு.ளு. கண்ணாலீ அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமில் அப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.







**ஏழாம் நாள்:** 28.01.2020 செவ்வாய் கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் எம் மாணவிகளால் தொழு நோய் பற்றிய விண்ணப்பமானது அக்கிராமத்தில் உள்ள பூர்த்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு எடுத்த இக்கணக்கெடுப்பின்படி ஒரு தொழுநோயாளி

கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று பயனடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மாலை 3.00 மணி அளவில் கல்லாக்கோட்டை கிராம சேவை கட்டிட வளாகத்தில் திட்ட அலுவலர், தொண்டர்கள் மற்றும் கிராம பிரதிநிதிகள் முன்னிலையில் முகாம் பணிகள் பற்றிய மதீப்பீடு செய்தல் கலந்தாய்வுக் கூட்டமானது நடைபெற்றது. மாலை 5.00 மணியளவில் முகாம் நிறைவு விழாவானது மாணவிகளின் பல்சுவை நிகழச்சிகளுடன் இனிதே நிறைவுற்றது.



